31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றுக்கள் பின்வருமாறு : (Rs'000)

| | **அல்பா** | **பீட்டா** |
|---|---|---|
| வருமானம் | 5,000 | 3,900 |
| விற்பனைக்கிரயம் | (2,220) | (1,800) |
| மொத்தஇலாபம் | 2780 | 2,100 |
| ஏனைய வருமானம் | 370 | |
| நிர்வாகச் செலவுகள் | (175) | (200) |
| விற்பனை விநியோக கிரயம் | (150) | (100) |
| நிதிச்செலவுகள் | (75) | (50) |
| ஏனைய செலவுகள் | (20) | (10) |
| வரிக்கு முன் இலாபம் | 2,730 | 1,740 |
| வருமான வரி | (600) | (400) |
| ஆண்டிற்கான இலாபம் | 2,130 | 1,340 |
| ஏனைய விரிவான வருமானம் | | |
| மீள் மதிப்பீட்டு நயம் | 200 | 100 |
| மொத்த விரிவான வருமானம் | 2,330 | 1,440 |

1) கொள்வனவு திகதியில் இருந்து ஆண்டிற்கு ரூ. 250,000 பெறுமதியான ஆலோசனை வழங்கல் சேவையை அல்பா பீட்டாவுக்கு வழங்குகிறது.

2) 31.03.2017 இல் முடிந்த ஆண்டுக் காலப்பகுதியில் பீட்டா ரூ. 1,000,000 பெறுமதியான பொருட்களை அல்பாவிடம் வாங்கியது. இப்பொருட்களில் அரைப்பங்கு ஆண்டிறுதியில் வெளியாருக்கு விற்பனை ஆகாமல் பீட்டாவிடம் காணப்பட்டது. அல்பா கிரயத்தில் 25% இலாபத்தை சேர்ப்பதை கொள்கையாக கொண்டது.

3) 31.03.2017 இல் முடிவடைந்த காலப்பகுதியில் அல்பா பீட்டாவிடம் ரூ. 1.5 மில்லியன் பொருட்களை கொள்வனவு செய்வது. இப்பொருட்களுள் 1/3 பங்கு விற்பனையாகாமல் அல்பாவின் இருப்பில் ஆண்டிறுதியில் காணப்பட்டது. பீட்டா தனது விற்பனைகளுக்கு விற்பனை விலையில் 25% இலாபம் சேர்க்கிறது.

4) கொள்வனவு திகதியில் பீட்டா ரூ. 750,000 பெறுமதியில் அல்பாவிற்கு ஓர் வாகனத்தை விற்றது. இதன் ஏட்டுப் பெறுமதி ரூ. 550,000 ஆகும். இச் சொத்தின் எஞ்சிய வாழ்நாள் 10 ஆண்டுகளாகும்.

5) இவ்வாண்டில் அல்பா மற்றும் பீட்டா நிறுவனங்கள் முறையே ரூ. 300,000 மற்றும் ரூ. 200,000 பெறுமதியான பங்கிலாபங்களை செலுத்தின.

**வேண்டப்படுவது :**

a) கொள்வனவு திகதியில் நன்மதிப்பைக் கணிக்க.
b) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றை தயாரிக்க.

**விடை**

a) நன்மதிப்பு கணிப்பீடு.

| | |
|---|---|
| செலுத்திய தொகையின் சீர்த்திருத்தப் பெறுமதி | 6,500 |
| *கூட்டு: கட்டுப்படா பாத்தியத்தையின் சீர் தூக்கியப் பெறுமதி* | 2,500 |
| | 9,000 |
| *கழி :* இனங்காணக்கூடிய தேறிய சொத்துக்களின் சீர்தூக்கிய பெறுமதி (6,500 +1,500) | (8,000) |
| கொள்வனவு திகதியில் நன்மதிப்பு | 1,000 |

b)

| | அல்பா | பீட்டா | சீராக்கம் | குழுமம் |
|---|---|---|---|---|
| வருமானம் | 5,000 | 3,900 | -1,000 (c)-1,500(c) | 6,400 |
| விற்பனைக்கிரயம் | 2,220 | 1,800 | -1,000(c)+100(d)-1,500(c)+125(d) | (1,745) |
| மொத்த இலாபம் | 2780 | 2,100 | | 4,655 |
| ஏனைய வருமானம் | 500 | 200 | -250 (b)- 200(e)-150(g) | 100 |
| நிர்வாகச் செலவுகள் | (175) | (300) | -100 (a)-250 (b) | (125) |
| விற்பனை விநியோக கிரயம் | (150) | (100) | -20(f) | (230) |
| நிதிச்செலவுகள் | (75) | (50) | | (125) |
| ஏனைய செலவுகள் | (20) | (10) | | (30) |
| வரிக்கு முன் இலாபம் | 2,860 | 1,840 | | 4,245 |
| வருமான வரி | (600) | (400) | | (1000) |
| ஆண்டிற்கான இலாபம் | 2,260 | 1,440 | | 3,245 |
| ஏனைய விரிவான வருமானம் | | | | |
| மீள் மதிப்பீட்டு நயம் | 200 | 100 | | 300 |
| மொத்த விரிவான வருமானம் | 2,460 | 1,540 | | 3,545 |
| | | | | |
| இலாபப் பகிர்வு | | | | |
| தாய் நிறுவனத்தின் உரிமையாளர்கள் | | | (3,245-258.75) | 2,986.25 |
| கட்டுப்படா பாத்தியத்தை | | | | 258.75 |
| | | | | |
| மொத்த விரிவான வருமானப் பகிர்வு | | | | |
| தாய் நிறுவனத்தின் உரிமையாளர்கள் | | | (3,545-283.75) | 3,261.25 |
| கட்டுப்படா பாத்தியத்தை | | | | 283.75 |

a. கட்டிடத்திற்கான மேலதிக தேய்வு

b. ஆலோசனை சேவைக் கட்டணம்

c. குழுமத்துள்ளான விற்பனை
d. பொருள் விற்பனை மீதான தேறாத இலாபம்
e. வாகன விற்பனை மீதான தேறாத நயம்
f. வாகனத்தின் மீதான மேலதிக தேய்வு
g. பங்கிலாப வருமானம்

செய்கை

**பீட்டா பதிவிட்ட மேலதிக கட்டிட பெறுமான தேய்வு**

ஏட்டுப் பெறுமதியின் மேலதிக தொகை - 1,500,000

மேலதிக பெறுமானத் தேய்வு - 1,500,000/15 = 100,000

**தேறாத இலாபம் - அல்பாவினால் விற்கப்பட்ட பொருட்கள்**

| | | |
|---|---|---|
| விற்பனை | 125 | 1,000,000 |
| விற்பனைக்கிரயம் | 100 | 800,000 |
| இலாபம் | 25 | 200,000 |
| தேறாத இலாபம் | 200,000*1/2 | 100,000 |
| | | |

**தேறாத இலாபம் - பீட்டாவால் விற்கப்பட்ட பொருட்கள்**

| | | |
|---|---|---|
| விற்பனை | 100 | 1,500,000 |
| விற்பனைக்கிரயம் | 75 | 1,125,000 |
| இலாபம் | 25 | 375,000 |
| தேறாத இலாபம் | 375,000 * 1/3 | 125,000 |

**தேறாத இலாபம் - பீட்டாவால் விற்கப்பட்ட வாகனம்**

| | |
|---|---|
| விற்பனை விலை | 750,000 |
| முன்கொணர்ந்த தொகை | (550,000) |
| தேறாத இலாபம் | 200,000 |
| | |
| மேலதிக பெறுமானத் தேய்வு | 200,000/10=20,000 |

**கட்டுப்படா பாத்தியத்தைக்கான இலாபம்**

| | |
|---|---|
| பீட்டாவின் இலாபம் | 1,440 |
| கட்டிடத்திற்கான பெறுமானத் தேய்வு | (100) |
| பொருள் விற்பனையின் தேறாத இலாபம் | (125) |
| வாகன விற்பனையின் தேறாத இலாபம் | (200) |
| வாகன விற்பனையின் தேறத்தகு இலாபம் (மேலதிக பெறுமானத் தேய்வு) | 20 |
| தேறிய இலாபம் | 1,035 |
| கட்டுப்படா பாத்தியத்தையின் இலாபப் பங்கு | 258.75 |

aat SRI LANKA

வாகனத்திற்கு இடப்பட்ட மேலதிக பெறுமானத்தேய்வு அவ் வாகனத்தை விற்பதன் மூலம் ஏற்பட்ட தேறாத இலாபத்தின் தேறிய தொகையாக கருதப்படல் வேண்டும்.

**கட்டுப்படா பாத்தியத்தைக்கான மொத்த விரிவான வருமானம்**

| | |
|---|---|
| கட்டுப்படா பாத்தியத்தைக்கான இலாபப் பங்கு (1,035*25%) | 258.75 |
| ஏனைய விரிவான வருமானப் பங்கு (100*25%) | 25 |
| மொத்த வரிவான வருமானப் பங்கு | 283.75 |